OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 03 ஞாயிற்றுக்கிழமை (16 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 50

# வடக்கில் பெரும் எடுப்பிலான தாக்குதல்; இடையில் நிறுத்தாமல் நடத்தப்படுமாம்

## தளபதி ஜெரி டி சில்வா தகவல்

கொழும்பு, ஜனவரி 16

வடக்கில் விரைவில் பெரும் எடுப்பிலான தாக்குதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக நடத்தப்படும் அந்தத் தாக்குதல், இடையில் நிறுத்தப்படாமல் ஒரே தொடர்ச்சியாக இருக்கும்.

புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா இத்தகவலை "லங்கா புவத்" செய்தி ஏஜென்சிக்கு வழங்கிய செவ்வியில் வெளியிட்டிருக்கிறார்.

சுமார் 14 ஆயிரம் துருப்புக்களைக் கொண்ட புதிய 14 படையணிகள் (பட்டாலியன்கள்) சண்டை நடக்கும் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் —

எனினும் அரசாங்கம் விதித்த நிபந்தனைகளை ஏற்குமாறு இந்தத் துருப்புக்கள் விடுதலைப் புலிகளை நிர்ப்பந்திப்பர் — என்றும் ஜெரி டி சில்வா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கான கால எல்லை எதனையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். (அ-த)

## பாரிஸ் ஈழநாடு அலுவலகத்தில் குண்டு வெடிப்பு?

பாரிஸ் ஜன 16

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இருந்து வெளிவரும் பாரிஸ் ஈழநாடு பத்திரிகை அலுவலகம் குண்டு வெடிப்பினால் சேதம் அடைந்ததாகவும்—

அலுவலகத்தில் இருந்த

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் ரெட்டியின் தஞ்சை விஜயம் ரத்து

### புலிகள் தாக்கலாம் என அச்சம்

சென்னை, ஜன. 16

தமிழக ஆளுநர் திரு. சென்னாரெட்டி தஞ்சாவூருக்கு நேற்று மேற்கொள்ள விருந்த தனது விஜயத்தை ரத்துச் செய்தார் என அறிவிக்கப்படுகிறது.

அவர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என மத்திய, மாநில உளவு நிறுவனங்கள் தெரிவித்ததை அடுத்தே அவர் தனது விஜயத்தை ரத்துச் செய்தார் என்று அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் அறிவித்தது. (இ-5)

## ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

பொங்கல் தினமான வெள்ளிக்கிழமை வடமராட்சிப் பகுதியில் ஹெலி ஒன்றிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. இதற்கு முதல் தினங்களில் இதேபோன்ற துண்டுப் பிரசுரங்கள் சாவகச்சேரிப் பகுதியிலும் வீசப்பட்டன. (இ-31-155)

## வலி வடக்கில் ஷெல் தாக்குதல்

### பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

பலாலி முகாமில் இருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் வலி வடக்குப் பகுதியை நோக்கி கடும் ஷெல் மற்றும் கனோன் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இத் தாக்குதலின் போது 20 க்கும் அதிகமான ஷெல்கள் பரவலாக விழுந்து வெடித்தன.

பொதுமக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலினால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. ப.நோ.கூ. சங்கக் கட்டடம் ஒன்றும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடும் தாக்குதலைத் தொடர்ந்து வலி வடக்கில் சில இடங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். [இ-45-5]

## வங்கக்கடலில் காவியமான கிட்டு மற்றும் போராளிகள் நினைவு நாள்

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியால் வங்கக் கடலில் வீரகாவியமான விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேர்ணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று தமிழ்ஈழம் எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

குடாநாட்டின் முக்கிய பகுதிகளில் இவர்களின் திருவுருவப் படங்கள் கொண்ட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கேர்ணல் கிட்டு பயணம் செய்த எம். வி. அகத் கப்பலின் மாதிரி அமைப்புகள் பல இடங்களிலும் மிதக்க விடப்பட்டுள்ளன.

வாகனங்களில் கேர்ணல் கிட்டுவின் படம் தாங்கிய மஞ்சள் தொடிகள் கட்டப்பட்டுள்ளன. (இ-17-87-155-109-173)

## வடமராட்சிக் கரையோரங்களை நோக்கி நேற்றும் பீரங்கித் தாக்கு

### வீடுகள், படகுகள் சேதம் -- மூவர் காயம்

வடமராட்சி கடற்பரப்பில் இருந்து நேற்று அதிகாலை கடற்படையினர் பலத்த ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம் ஆகிய கடற்பகுதியில் தென்பட்ட கடற்படையினரின் விசைப் படகுகள் இரண்டில் இருந்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காலை 6.15 மணி முதல் சுமார் அரை மணி நேரம் படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர் தாக்குதலை அடுத்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் அவசரமாகக் கரை திரும்பினர். கடற்படையினரின் கண்மூடித் தனமான தாக்குதலால் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள வீடுகள் பலவும் மற்றும் மீன் பிடிப் படகுகளும் சேதமடைந்தன. மூவர் காயமடைந்தனர்.

மயிலியதனையில் இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டி குடியேற்றப் பகுதியில் வசிக்கும் பிள்ளையாக்குட்டி குட்டிராசு (வயது 24), திக்கத்தைச் சேர்ந்த திருமதி திருநாவுக்கரசு சின்னப்பிள்ளை (வயது 70), மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டியில் வசிக்கும் எஸ்.குருகுலசாமி ஆகியோரே நேற்றைய தாக்குதலில் காயமடைந்தவர்கள் ஆவர்.

#### ஆலயம் சேதம்

நேற்றுக் காலை படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலினால் வல்வை முத்துமாரியம்மன் கோவில் கோபுரமும் கூரைப் பகுதியும் சேதமடைந்தன.

வல்வை மகளிர் மகா வித்தியாலயம், சிவகுரு வித்தியாலயம், சிதம்பரா கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு அண்மையிலும் பீரங்கிக் குண்டுக்கள் விழுந்து வெடித்தன.

கடந்த வியாழக்கிழமையும் வடமராட்சிக் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதும் —

வயோதிபர் ஒருவர் அதிர்ச்சியால் மரணமானதும் தெரிந்தவையே. (இ-5-15-155-173-87)

## கனேடிய நல்லெண்ணக் குழு நேற்று கிளிநொச்சி விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 16

கனடா நாட்டைச் சேர்ந்த நல்லெண்ண தூதுக் குழு ஒன்று நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியை சென்றடைந்தது.

மூவரைக் கொண்ட மேற்படி தூதுக்குழுவினர் கிளிநொச்சியில் இரண்டு நாட்கள் தங்கி இருப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திரு றொபின்ஹே தலைமையிலான இக் குழுவில் திரு. ஹசன், இலங்கை — கனடா அபிவிருத்தி பிரதிநிதி திரு. டென் பிறெவுண் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்றுப் பிற்பகல் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையில் இடம்பெற்ற மதிய போசன வைபவத்தில் அவர்கள் கலந்து கொண்டனர். பின்னர் அவர்கள் விசுவமடுவில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களைச் சென்று பார்வையிட்டனர்.

பிற்பகல் 5 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் தூதுக் குழுவினர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். பின்னர் கிளிநொச்சி அரச அதிபரையும் அவர்கள் சந்தித்தனர்.

## 37 பயணிகளுடன் மாஹோ புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 16

'மாஹோ' கப்பல் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் சென்றது. பயணிகள் 37 பேரும், கொழும்பில் அவசர சிகிச்சைக்காக செல்லும் நோயாளி ஒருவரும் அந்தக் கப்பலில் நேற்றுப் பயணமாகினர்.

### முச்சந்தி முரளி



அரசமைப்புத் தெரிவுக் குழுவுக்கும் சாவு மணி அடிக்க இப்பவே நாள் குறிச்சிருப்பினம் பாருங்கோ.....!

## பாதுகாப்பு வலய பகுதிக்குள் ஷெல்!

### இன்று அதிகாலை நால்வர் காயம்

படையினர் ஏவிய மூன்று ஆட்லறி ஷெல்கள் இன்று ஞாயிறு அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் விழுந்து வெடித்தன.

இதனால் நால்வர் காயம் அடைந்தனர் சில கடைக் கட்டடங்கள் சேதம் அடைந்தன.

இன்று அதிகாலை 12.20 மணியில் இருந்து சுமார் பத்து நிமிட இடைவெளியில் மூன்று ஷெல்களும் ஏவப்பட்டன.

சைக்கிள் ரிக்‌ஷோக் காரரான கல்வியங்காடு - முத்திரைச்சந்தியைச் சேர்ந்த இரத்தினம் இராசலிங்கம் (வயது32) பத்மநாதன் ஜெயராஜ் (வயது 28) ஆகியோரும் —

ம. ராமையா (வயது 55) என்பவரும் —

வீட்டில் நித்திரையாக இருந்த தங்கவேல் தியாகலிங்கம் (வயது 51) என்பவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (இ-15)

## மீளக்குடியேற்றப்பட்டோர் சுகந்திரமாக நடமாட தடை

மட்டக்களப்புப் பகுதியில் பலவந்தமாக மீளக் குடியேற்றப்பட்ட தமிழர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு விசேட அதிரடிப் படை தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தமிழர்கள் சிறைக் கைதிகள் போன்று வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் இருந்து இத் தமிழர்கள் வெளியே செல்லவும், திரும்பவும் விசேட அதிரடிப் படையின் அனுமதி பெற வேண்டும் என்று உத்தர விடப்பட்டுள்ளது.

உணவுத் தேவை மற்றும் தொழில் முயற்சிக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லவும் அவர்களுக்கு

( 6ஆம் பக்கம் பார்க்க)

## 92 உயர்தரப்பரீட்சை வெட்டுப்புள்ளி மாதமுடிவில்

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி இம்மாத இறுதியில் வெளியாகவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வெட்டுப்புள்ளி கணக்கிடும் வேலைகள் தற்போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேவேளை — 1993 ஆகஸ்டில் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் வெட்டுப்புள்ளியையும், செப்டம்பர் மாதத்தில் வெளியிட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. (இ-3)

## பொங்கலன்று வெடி அடித்து விளையாடிய மூவர் காயம்

பொங்கல் தினம் வெடி அடித்து விளையாடியவர்களில் மூவர் கை, கால்களில் காயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் துரைராசா வீதியில் கிருஷ்ணன் மோகனகுமார் (வயது 16) என்பவர் 50 கலிபர் வெற்றுத் தோட்டாவில் நெருப்புக்குச்சி மருந்தை திணித்து அடித்தபோது அது வெடித்துச் சிதறியதில் காயமடைந்தார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த சந்திரசேகரம் சதீஸ் (வயது 13) சைக்கிள் வால்வ் கட்டையில் நெருப்புக்குச்சி மருந்தைத் திணித்து அடித்தபோது அது வெடித்ததில் காயமடைந்தார்.

இதேபோன்று ஏழாலை கிழக்கைச் சேர்ந்த தம்பித்துரை சாந்தரூபன் (வயது 18) என்பவர் 50 கலிபர் வெற்றுத் தோட்டாவில் நெருப்புக்குச்சி மருந்து திணித்து வெடி அடித்த போது அது வெடித்துச் சிதறியதில் காயமடைந்தார். (இ-15)

## அரசமைப்புத் தெரிவுக் குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்க புலிகளுக்கு பிரதமர் அழைப்பு

கொழும்பு, ஜனவரி 16

தமது தலைமையில் இயங்கும் அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு—

அரசமைப்பில் உள்ள குறைபாடுகளையும், அவற்றைத் திருத்துவதற்கான யோசனைகளையும் தெரிவிக்குமாறு—

பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை —

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி வைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக, திரு. மங்கள முனசிங்கா தலைமையிலான இனப்பிரச்சினை சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் வடக்கு - கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்ற சிபார்சை அரசு ஏற்றுக் கொள்ளும் என்றும் பிரதமர் தெரிவித்தார்!

அக்குரஸ்ஸ மாநாதனை என்ற [illegible] மேலும் கூறியதாவது:-

இடத்தில் [illegible] அரசமைப்புச் சீர்திருத்த திறந்து வைத்துப் பேசுகை அவர் தமது உரையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு விடுதலைப் புலிகள் தமது யோசனைகளைச் சமர்ப்பித்தால் அக்குழு அவற்றை ஆராய்ந்து அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யும்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு விடுதலைப்புலிகளுக்கு பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. ஆனால் விடுதலைப் புலிகள் அவற்றைப் பயன்படுத்த தவறியுள்ளார்கள். அவர்களுக்கு நாம் விடுக்கும் கடைசி அழைப்பு இதுவாகும்.

அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் அமுல் செய்ய இருக்கிறது.

வடக்கிலும், கிழக்கிலும் யுத்தத்தை நிறுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கையாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளை கோட்பாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்காலிகமாக இணைக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புடன் வாழப் பழக வேண்டும்;

# உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது!

## மலேரியாவின் முன்னால் மண்டியிடும் விஞ்ஞானம்

அங்கிங்கெனாதபடி உலகெங்கும் இன்று நீக்கமற நிறைந்து காணப்படுவது என்ற 'பெருமை' நுளம்புக்குக் கிடைத்துள்ளது.

உலகப்புகழ் பெற்ற அமெரிக்க 'ரைம்' சஞ்சிகையின் அட்டைப்படமாக இடம் பெறும் அளவுக்கு நுளம்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இயற்கையுடன் மனிதன் நடத்தும் மோதலில் இவ்வளவு சின்னஞ்சிறிய பூச்சி ஒன்று அவனின் பல துன்பங்களுக்கு காரணமாக இருப்பது வரலாற்றுக் காலத்திலேயே இடம்பெறாத ஒன்றாக அமைந்துள்ளது என 'ரைம்' சஞ்சிகை கூறுகிறது.

சரித்திர காலம் முதல், மனிதனோடு வாழும் பூச்சியாக நுளம்பு கருதப்படுகிறது.

சில தசாப்தங்களுக்கு முன்னர் மலேரியா முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது என்று கருதப்பட்டது.

டி.டி.ரி என்ற கிருமிநாசினியைப் பரவலாகப் பயன்படுத்தியதன் மூலம் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளில் மலேரியா ஒழிக்கப்பட்டு விட்டதாக எண்ணப்பட்டது.

மலேரியாவை சுகப்படுத்தும் அதிசய மருந்து என்று கருதப்பட்ட குளோரோகுயின் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அடுத்து இம் மருந்து உலகில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

1950களில் குளோரோகுயின் மருந்து கலக்கப்பட்ட உப்பையே மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று அப்போதைய பல அரசாங்கங்கள் தமது மக்களைக் கேட்டுக் கொண்டன.

எனினும் இந்த மருந்து பலனளிக்காத நிலை மிக விரைவில் ஏற்பட்டது.

1960களில் பிளாஸ்மோடியம் பல்சிபரம் என்ற வைரஸால் பரப்பப்படும் மலேரியாவை குளோரோகுயின் மருந்தால் கட்டுப்படுத்த முடியாத நிலை தெற்காசிய நாடுகளில் ஏற்பட்டது.

அந்த மருந்தின் தாக்கத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றும் சக்தியை நுளம்புகள் பெற்று விட்டன என்பதே இதன் கருத்தாகும்.

அன்றில் இருந்து —

மலேரியாவைப் பரப்பும் வேறு வகை வைரஸ்கள் உலகின் பல பகுதிகளிலும் புதிது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளுக்கு எதிரான தற்காப்புச் சக்தியை வேகமாகப் பெற்று வருவது கண்டுபிடிக்கப்பட்டது.

பெண் அனோபிளஸ் நுளம்பு இனத்தில் காணப்படும் சுமார் 70 வகைகள், டி. டி. ரி கிருமிநாசினியை எதிர்க்கும் சக்தியைப் பெற்றன.

மலேரியாவை மருந்துகளாலும் கிருமிநாசினிகளாலும் ஒடுக்கும் முயற்சிகள் மருத்துவத்துறையின் பாடப்புத்தகங்களில் மட்டும் இடம்பெறும் அளவுக்குச் செயலிழந்துபோய் விட்டன. இது இயற்கைக்கு முன் விஞ்ஞானம் மண்டியிட்டுள்ளதற்கு உதாரணமாக அமைகின்றது.

> புகழ் பெற்ற அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை நுளம்பின் உருப்பெருக்கப்பட்ட தலையை அட்டைப்படமாக வெளியிட்டு விரிவான கட்டுரை ஒன்றை அண்மையில் பிரசுரித்தது.
>
> அதன் தொகுப்பே இங்கு தரப்படுகிறது.
>
> 1950களில் அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட மலேரியா மீண்டும் உலகை உலுப்ப ஆரம்பித்துள்ளது
>
> முன்னிலும் பார்க்க பல மடங்கு உக்கிரத்துடன் பரவி வரும் மலேரியாவைக் கட்டுப்படுத்த போர்க்கால ஏற்பாடுகளைமேற்கொள்ள வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

மலேரியா வைரஸ்கள் நுளம்பு என்ற வாகனத்தில் ஏறி மீண்டும் போருக்கு புறப்பட்டுள்ளன. இம்முறை வஞ்சம் தீர்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அவை மீண்டும் போர்ப்பிரகடனம் செய்துள்ளன.

### இவ்வாண்டில் 30 கோடி பேர் பாதிப்படைவர்

இந்த ஆண்டு 30 கோடி மக்களுக்கு அதிகமானோர் மலேரியாவினால் பாதிக்கப்படுவர். இவர்களில் 10லட்சம் முதல் 20 லட்சம் வரையானோர் மரணம் அடைவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உயிரிழப்போர் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று உலக சுகாதார அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

சிகிச்சையால் குணப்படுத்த முடியாத மலேரியாக் காய்ச்சல் மனித இனத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக வந்துள்ளதாக உலக சுகாதார ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆபிரிக்கக் கண்டத்தில் எய்ட்ஸ் நோய் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. அதனிலும் பார்க்க மிகப்பயங்கர அச்சுறுத்தல் மலேரியாவினால் தான் ஆபிரிக்க மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டரைக் கோடி மக்கள் தொகை உள்ள கென்யா நாட்டில் எய்ட்ஸ் நோயினால் 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மலேரியாவினால் மொத்த மக்கள் தொகையில் 80 சதவீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மலேரியா நிபுணர் டாக்டர் ஜோன் ஹென்றி ஒவுமா தெரிவித்தார்.

காலையில் விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகள், மாலையில் அறிவிழந்த நிலையில் மருத்[illegible] கொண்டு செல்லப்படும் அளவுக்கு மலேரியா[illegible]தல் ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் மலேரியா மீண்டும் தோன்றியுள்ளது. பல்சிப்பரம் வைரஸால் ஏற்படும் மலேரியா ஒருவரை மூன்று தினங்களில் கொன்று விடுகிறது என்று லண்டன் நிபுணர் டாக்டர் ஹொாண்பெக்ரென்ஸ் சொல்கிறார்.

மலேரியா நோய் இல்லாத இடங்களில் மலேரியா பரவினால், டாக்டர்கள் நோயின் குறிகளை வைத்து அது மலேரியாவா என்பதைச் சரியாக அடையாளங் காண முடியாத நிலையும் உள்ளது. டாக்டர்கள் அதனை வெறும் 'புளூ' ஜுரம் என்றே கருதி விடுகின்றனராம். இதனால் வீடு திரும்பும் நோயாளர் மூன்று தினங்களில் மரணம் அடைய நேரிடுகிறது.

### உலகமாநாடு

மலேரியா மீண்டும் உக்கிரத்துடன் படை எடுத்திருப்பது உலக சுகாதார ஸ்தாபனத்தை சிந்திக்க வைத்துள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபரில் 101 நாடுகளைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொண்ட இது தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றை அம்ஸ்ரடாம் நகரில் உலக சுகாதார ஸ்தாபனம் நடத்தியது.

மலேரியாவை முற்றாக ஒழிப்பது என்று 1960 களில் உருவாக்கப்பட்ட கோட்பாடு இப்பொழுது செல்லாக்காசாகி விட்டது.

அதற்கு பதில் நோயின் குறிகளை பூர்வாங்க நிலையில் சரியாக அடையாளங் கண்டு சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். அதன் மூலம் நோய்பரவுவதைத்தடுக்க முடியும் என்ற புதிய சிந்தனை அம்மாநாட்டில் தோன்றியது.

''நுளம்புடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு அதனுடன் நாம் வாழப் பழக வேண்டும்'' என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் ரால்ப் ஹெண்டர்ஸன் தெரிவித்திருக்கிறார்.

### பல முனை யுத்தம்

மலேரியா ஏற்படுத்தும் துன்பங்களில் இருந்து மக்களுக்கு நிவாரணம் அளிக்க தனித்த ஒரு தீர்வு குறித்து சர்வதேச சுகாதார அதிகாரிகள் சிந்திக்கவில்லை.

நுளம்புக்கு எதிரான போரை பல முனைகளில் இருந்து நடத்தி— பல்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்த— உலக சுகாதார ஸ்தாபனம் முயற்சித்து வருகிறது.

சுகாதார வசதிகளை மேம்படுத்துவது, கிருமிநாசினி தெளிப்புப் பிரசாரங்களை மேற்கொள்வது, சுற்றுப்புறங்

**-தீபன்ராஜா-**

களை துப்புரவாக வைத்திருப்பது, நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை இல்லாதொழிப்பது முதலிய நடவடிக்கைகளில் அக்கறை காட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை — நுளம்புகளை எதிர்க்கும் சக்திகளைக் கொண்ட மருந்துகளையும், கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிப் பணிகளிலும் உலக சுகாதார ஸ்தாபனம் முடுக்கிவிட்டுள்ளது.

எப்படியாயினும் — நுளம்புடன் வாழ மனித இனம் தன்னை பக்குவப்படுத்திக் கொள்வதுதான் இன்றுள்ள ஒரே வழியாகும்.

★

## உயிர்க்கொல்லிப் பெண் அனோபிளஸ்

Mal என்பது 'கெட்ட' என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது.

Aria என்பது 'காற்று' என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது.

இரண்டும் சேர்ந்து Malaria ஆகின்றது.

கெட்ட காற்று என்பதை மாசடைந்த சுற்றுப்புறச் சூழல் என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொண்டால், சூழல் துப்புரவாக இருப்பின் மலேரியா ஏற்படாது என்பதையே இப்பெயர் வலியுறுத்துகின்றது.

1800 களின் பிற்பகுதியில் நிலவிய விஞ்ஞான சிந்தனைகளின்படி, பெரும்பாலான நோய்களுக்கு பக்டீரியாவே காரணம் என்று கருதப்பட்டது. அதற்கு ஏற்ப 1880இல் மேஜர் சார்ள்ஸ் லூயி அல்போன்ஸி லவரன் என்ற பிரெஞ்சு இராணுவ டாக்டர் உருப்பெருக்க கண்ணாடியின் துணையுடன் மனித இரத்தத்தில் மலேரியா ஒட்டுண்ணி இருந்ததை அடையாளம் கண்டார்.

எனினும் — 1898 வரை மலேரியா ஒட்டுண்ணி மனித உடலினுள் எப்படி புகுந்து கொள்கிறது என்பதை எவரும் கண்டுபிடிக்கவில்லை.

### நோபல் பரிசு

டாக்டர் றொனால்ட் றொஸ் என்ற பிரிட்டிஷ் நுண்ணியல் நிபுணர் நுளம்புமூலம் தான் மலேரியாவைப் பரப்பும் ஒட்டுண்ணி மனித உடலில் புகுந்து கொள்கின்றது என்பதைக் கண்டுபிடித்தார்

அதற்காக டாக்டர் றொஸ்ஸுக்கு அந்த ஆண்டின் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அதே ஆண்டு புகழ்பெற்ற இத்தாலிய உயிரியல் விஞ்ஞானி கியோவானி பறிஸ்றா கிறாஸி மலேரியா வைரஸை பெண் அனோபிளஸ் நுளம்புதான் மனித உடலினுள் செலுத்துகிறது என்பதைக் கண்டுபிடித்தார்.

### அனோபிளஸ்

மிகச்சிறிய வசீகரமான உடலைக்கொண்ட அவளின் இறகுகள் மீது கறுப்புப் புள்ளிகள் காணப்படுகின்றன

மூன்று ஜோடி நீண்ட மெல்லிய கால்கள் அவளுக்கு உண்டு. அத்துடன் குழல் வடிவான நீண்ட மூக்கும் அவளுக்கு உண்டு. தன்னிடம் உள்ள முட்டைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு அவளுக்கு புரோட்டீன் சத்து தேவைப்படுகிறது. அதனை அவள் மனித இரத்தத்தின் மூலம் பெறுகின்றாள்.

அந்தி சாயும் நேரம் அவள் மனித இரத்தவேட்டைக்குப் புறப்படுகின்றாள்.

ஹாயாவாக ஓய்வெடுப்பவர், காரில் செல்பவர் ஆழ்ந்த நித்திரையில் இருப்பவர் — இப்படியானவர்களை எல்லாம் அவள் விட்டு வைப்பதில்லை.

எச்சரிக்கையுள்ளவர்கள் அவளை, அவள் நிற்கும் விதத்தில் அடையாளங்கண்டு விடுவார்கள்

அவளின் தலை கீழ்நோக்க, அவள் உடலின் வால் மற்றும் ஒரு ஜோடி கால்கள் மேலே எழுந்து நிற்கும்.

இரையைக் கண்டதும் அவசரம் அவசரமாக அவள் கீழிறங்கி மனித உடலில் அமர்கின்றாள். பின் தனது மூக்கில் உள்ள நீண்ட குழாய் போன்ற போர் ஆயுதத்தை வெளியே நீட்டுகின்றாள். பின்னர் தனது இருமுனைகள் கொண்ட கூர் ஆயுதத்தால் தோலைக் கிழிக்கின்றாள். அதனைத் தொடர்ந்து பற்களைக் கொண்ட இரண்டு பிளேடுகளால் சிறிய நரம்பை உடலில் தேடுகின்றாள். அதனைக் கண்டுபிடித்தவுடன், ஒரு வெற்றுக்கூர் முனையை காயத்தில் ஒட்டியபடி வைத்துக்கொண்டு தன்னிடம் உள்ள குழாய் மூலம் இரத்தத்தை உறிஞ்சி எடுக்கத் தொடங்குகின்றாள்.

### மயக்க மருந்து

அவளின் இந்தக் 'கடி'யை மனிதன் உணரமுடியாதபடி இருக்க, அவள் தன்னிடம் உள்ள உமிழ்நீரின் ஒருசில துளிகளை உடலில் ஏற்றுகின்றாள். அது மயக்கமருந்தாகச் செயல்படுகின்றது.

இந்த உமிழ்நீர்தான் மலேரியாக்காய்ச்சலைப் பரப்புகின்றது. அதில் ஆயிரக்கணக்கான நுண்ணிய சிறிய ஒட்டுண்ணிகள் உள்ளன. மலேரியாவினால் பாதிக்கப்பட்ட ஒருவரை அவள் 'கடித்து' இரத்தத்தை உறிஞ்சிய பின்னர் இருவாரங்களாக இந்த ஒட்டுண்ணிகள் அவளின் வயிற்றில் பலமடங்காகப் பெருக்கம் அடைகின்றன.

இம்மலேரியா ஒட்டுண்ணிகள் நேரடியாக மனிதனின் கல்லீரலையே சென்றடைகின்றன. அங்கு அவை ஒரு வாரங்கள் தலைமறைவு வாழ்க்கையை நடத்துகின்றன. இது மனிதனுக்குத் தெரியாமலே நடைபெறுகின்றது. இந்த அடைகாக்கும் பருவம் முடிந்தவுடன் கல்லீரலின் அணுக்கள் வெடிக்கின்றன அவை இன்னும் ஆயிரக்கணக்கான ஒட்டுண்ணிகளை இரத்த ஓட்டத்துடன் சேர்க்கின்றன. இவை இரத்த ஓட்டத்தில் காணப்படும் செந்நிற அணுக்களை கைப்பற்றுகின்றன. சில தினங்களின் பின்னர் இச்செந்நிற அணுக்கள் வெடித்து மேலும் பல ஆயிரக்கணக்கான ஒட்டுண்ணிகளை இரத்த ஓட்டத்தில் சேர்த்துவிடுகின்றன

மூளையில் காணப்படும் மயிரிழை போன்ற இரத்தக் குழாய்களில் இடம்பெறும் இரத்த ஓட்டத்தை தடை செய்யும் அளவுக்கு பல்லாயிரக்கணக்காக இந்த ஒட்டுண்ணிகள் பெருகுகின்றன

இதனால் செந்நிற அணுக்கள் வேகமாக அழிகின்றன. அதனால் பாதிக்கப்பட்டவர் இரத்த சோகை நோய்க்கு ஆளாகின்றார்.

அனோபிளஸ்— மிகப் பயங்கரமான உயிர்க்கொல்லிப் பெண் அவளைத் தோற்கடிப்பதற்கு மனிதனுக்கு உள்ள ஒரே ஒரு வழி, அவள் தோற்றுவதற்குரிய காரணிகளை அறிந்து அவற்றை அழித்துவிடுவதேயாகும்.

### நுளம்பின் குடியிருப்புகள்

தேங்கி நிற்கும் நீர் அனோபிளஸ் நுளம்புகள் தோன்றக் காரணமாகிறது.

தெளிந்த நீரோடைகள், உவர்நீர் குட்டைகள், கால் நடைகளின் குளம்புகள் பதிந்த சிறிய சுவடுகள் மற்றும் தேங்காய்ச்சிரட்டைகள் எல்லாம் அனோபிளஸ் உற்பத்திக்கு உகந்த இடங்களாகும்.

பழைய கழித்துவிடப்பட்ட டயர்கள், ஆக்கிவிசப்பட்ட வெற்றுக் கொள்கலன்கள், வடிகால் வாய்கள், வயல் வெளிகளும் அனோபிளஸின் குடியிருப்புகளாகும்.

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 16

தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ''எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்'' என்ற நூலை வெளியிடவிருக்கிறது.

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 16

நல்லூர் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும் என நல்லூர்— யாழ்ப்பாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீ. புலேந்திரன் அறிவித்துள்ளார். (உ)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 16

ஊர்காவற்றுறை,வேலணை கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறவிருக்கிறது.

யாழ். தெற்கு வலயப் பணிப்பாளர் செல்வி மீ.பெரியதம்பி இக்கூட்டத்தில் கலந்து கொள்வார். (த-3)

## கிழக்கு பல்கலை மாணவருக்கு பயண ஒழுங்கு

யாழ்ப்பாணம், ஜன. 16

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நாளை மட்டக்களப்புக்குப் புறப்பட்டுச் செல்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வலிகாமம் கிழக்கு வலிகாமம் மேற்குப் பகுதி மாணவர்களை நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலும்—

வடமராட்சிப் பகுதி மாணவர்களை பிற்பகல் 2-30 மணிக்கு கொடிகாமம் பஸ் நிலையத்திலும் தயாராக சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ)

## கல்வி நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 16

பளைப் பிரதேசக் கல்வி நிலையம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பளை மகாவித்தியாலயத்தில் திறந்துவைக்கப்படும். பிரதேசக் கல்வி அலுவலர் திரு. ப. அரியரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. கமலநாதன் பிரதம விருந்தினராகவும், பளைப் பிரதேசச் செயலர் திரு. இ. ஐயாத்துரை சிறப்பு விருந்தினராகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனர். (த)


விஞ்ஜியோர் அக்கடமி

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

பிரத்தியேக

O/L

விஞ்ஞானம்

J J. கொலின்ஸ்

ஆரம்பம்:

17 — 01 — 1994

(மாலை 5 மணி)

(28886)



MAY THE MID TOWN ROTARACT CLUB OF JAFFNA

Be Firm as the ROOT
And Please others
as the FRUIT
On the 2nd Anniversary
Our Best Wishes
From

HARY'S INSTITUTE KONDAVIL EAST KONDAVIL



எமது புதிய வெளியீடுகள்

லிட்டில் சுப்பர் ஸ்ரார்
சிலம்பரசன், ஹீரா

சபாஷ் பாபு

சுப்ப ஸோ வீடியோ, ஓடியோ சென்ரர்,
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,

(6980)



மாருதி வீடியோ விஷன்
(MARUTHY VIDEO VISION)
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,

எமது புதிய வெளியீடுகள்

முதல் உதயம் ★ அர்ஜுன், சுமா, ★ செந்தில், S S சந்திரன்

இப்படி இருக்க வேணும் பொம்பிள ★ சுரேஸ், ★ விஜயசாந்தி, ★ S.S. சந்திரன் ★ செந்தில்

ரவுடி ராஜ்யம் ★ கிருஷ்ணா ★ கிருஷ்ணம்ராஜ் (இரு வேடம்) ★ சுஜாதா, ★ ராதிகா, ★ ஜெயப்பிரதா

தர்ம பூமி ★ பாலகிருஷ்ணா, ★ சோபனா பாபு

சீதா கீதா ★ ராதா, ★ விஜயகுமார், ★ ஆனந்தபாபு. ★ ஜனகராஜ்

HOT SHOTS - 2
(தாக்குதல் சித்திரம்)

- புதிதாக வெளிவரும் படங்கள் உடனுக்குடன் பிரதி செய்து கொடுக்கப்படும்.
- பதிய - பழைய திரைப்பட பாடல்கள் (ஓடியோ) சிறந்த முறையில் பதிவு செய்து கொடுக்கப்படும்.
- புதிய பாடல்கள் C D (கொம்பாக்ட் டிஸ்க்) இல் வெளி வந்துள்ளன. இவை மிகச் சிறந்த முறையில் பிரதி செய்து கொடுக்கப்படும்.

(28955)


## ஓர் ஆண்டில் ஓர் உறுதி

விடுதலை வேட்கை கொண்ட வீரத் தளபதியே!
கொடுவினை களைந் தெறிய கொதித்தெழுந்த - கிட்டுமாமா
நடுவழியில் வஞ்சகமாய் யமனும் உனைக் கொன்றானே
தொடுகடலே என்ன செய்தாய்? எம் தளபதியை- ஏன் எடுத்தாய்?
வித்தகனே விண்ணரசாள்வாய்- படையாய் வந்த- இந்தியனை
பார்த்திருக்க புறமுதுகிடச் செய்து நடையிலே- உயர்ந்த கிட்டண்ணா!
நாம் இன்றுன்னை நினைத்தெழுவோம் - கொள்கைவீரம்
கொடுந் துணிவு கொண்ட தளபதியை கொன்ற- சூழ்ச்சி நற்செயலோ?
இறைவா சொல்! குள்ளர் தம்மை அறிந்திட்டோம்
குறித்தே எதிர்ப்போம் பகை வெல்வோம் - வெல்லும் புலிவீரர்
எமைக்காப்பர் வீரம் எமக்கு வந்ததையா - உன்
மறைவின் ஓர் ஆண்டில் ஓர் உறுதி எடுத்து விட்டோம்
பள்ளி செல்லும் மாணவிகள் நாம் - உன்
பாதச் சுவட்டில் நடை பயில்வோம்.

30 ஸ்ரீ 6214 தமிழீழ பாடசாலை சேவை- உரிமையாளர். க. செல்வரட்ணமும், யா/ இந்து மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும்.

(28957)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 23 |  | 15 |
| 03 | | 12 |
| 1938 | | 1993 |

### அமரர் சின்னத்துரை சந்திரசேகரம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எம் நலனே தம் நலனாகவும் கொண்டு வாழ்ந்து 15 — 12 — 1993 ஆம் திகதி எம்மை விட்டு விண்ணுலகம் சென்ற எமது குடும்பத் தலைவர் சின்னத்துரை சந்திரசேகரம் அவர்களின் சுகவீனத்தின் போது பல வழிகளில் உதவி புரிந்தும், அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டும், மலர் அஞ்சலி செலுத்தியும், துண்டுப் பிரசுரம் வெளியிட்டும், அஞ்சலி உரை நிகழ்த்தியும், எமக்குத் தேறுதல் சொல்லியும், வேறும் பல வகைகளில் உதவி புரிந்தோருக்கும் எமது கடப்பாடுடன் கூடிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்று 16 — 01 — 1994 ஆம் திகதி அன்னாரின் இல்லத்தில் அவரின் நினைவாக நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

திருமதி ச. சரஸ்வதி,
ச. கேதீஸ்வரன், ச. குகனேஸ்வரன்,
ச. சித்திரேஸ்வரன்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(28948)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அற்புதமான ஓர் இலட்சியவாதியாக வாழ்ந்து போராடிய மாவீரன் கிட்டு

## தளபதிக்கு தேசியத் தலைவர் செலுத்திய இதய அஞ்சலி

அற்புதமான ஓர் இலட்சியவாதியாக வாழ்ந்து போராடி மக்கள் இதயங்களைக் கவர்ந்த மாவீரன் கிட்டு.



மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளிற் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விவரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் இப்படித்தான். அவனது மறைவு என் ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு

> இந்திய அரசின் — வரலாற்றுத் துரோகத்தில் — ஆழ்கடலில் விரித்த மரணப் பொறியில் — சிக்கி, வங்கக் கடலில் தன்னைத்தானே ஆகுதியாக்கிய தளபதி கேணல் கிட்டுவினதும் மற்றும் ஒன்பது போராளிகளினதும் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.
>
> தளபதி கிட்டுவின் 31 ஆவது நினைவு நாளில் அவருக்கு இதய அஞ்சலி தெரிவித்து தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளியிட்ட செய்தி அவரது நினைவு நாளை ஒட்டி இங்கு மறு பிரசுரமாகின்றது:

அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில் — ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் — ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் — வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்தில் இருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்து சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால் அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொது மக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின்



பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

கிட்டு நீ சாகவில்லை, ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!

★

## கீர்த்தி மகுடம் தரித்த கிட்டு!

எங்கள் தாய்நாட்டின்
ஈடில்லாப் பெருஞ்சுடரை
வங்கக் கடல் நடுவே
வைத்தணைத்தார் வஞ்சகர்கள்!

★

புலிமறவன் மூச்சுக்குப்
புல்லர்கள் தடை விதித்தார்!
எரிநகரம் ஆகும்; அவர்
இருக்கின்ற அயல் நாடு!

★

போரறிவும், நூலறிவும்
பொங்கிவரும் கலையறிவும்
நேரறிந்து வாழ்ந்திட்ட
நெஞ்சத்திற் கினியவன் நீ!

★

தமிழீழப் பொக்கிஷமாய்த்,
தலைவன் தாள் பணிபவனாய்;
நொடிதோறும் தாய் நாட்டின்
நோய் தீர்க்கும் ஆர்வலனாய்ப்;
பிறநாடு பலவெல்லாம்
சென்று பணி செய்தவனே!
ஓராண்டு நிறைவில் என்
ஒரு கவிதா அஞ்சலியாம்!

- ஜெ. கி ஜெயசீலன்.

## பொலீஸ் கான்ஸ்டபிளிடம் ஏராளமான ரி 56 ரவைகள்

### தடுத்து வைக்கப்பட்டு விசாரணை

கொழும்பு, ஜன. 16

கண்டி பொலீஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவரிடமிருந்து பெருந்தொகையான ரி-56 ரக ரவைகளை பொலீஸார் கைப்பற்றினார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

கான்ஸ்டபிள் தம்மிடம் இருந்த பையினுள் இந்த ரவைகளை ஒளித்து வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி பொலீஸ் நிலையத்தில் இக்கான்ஸ்டபிள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

## தப்பி ஓடிய சிப்பாய் ரி-56 ரைபிளுடன் கைது!

### பல கொள்ளைகளில் ஈடுபட்டவராம்

கொழும்பு, ஜன. 16

இராணுவத்தை விட்டு தப்பி ஓடி கொள்ளைகளை நடத்தி வந்த சிப்பாய் ஒருவரை அனுராதபுரம் பொலீஸாரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் கைது செய்தனர்.

ரி 56 ரைபிளுடன் ஒளித்திருந்தபோது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப சிப்பாய், விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் பிறந்ததினம் அன்று அனுராதபுரம் சாலியா மாவத்தையில் உள்ள அரிசி ஆலைக்குச் சென்று தம்மை ஒரு தமிழர் என்று கூறி 6 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரம், பிள்ளையார் சந்தியில் உள்ள நகைக்கடை ஒன்றிலும் இருந்து 35 ஆயிரம் ரூபாவை கொள்ளையிட்டிருந்தார் என்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஓ-எ)

# வடக்கு-கிழக்கு மாகாணசபை; 3 பிராந்திய அலுவலகங்கள்

கொழும்பு, ஜன. 16

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அதிகாரங்களை பரவலாக்கும் நோக்குடன் மூன்று பிராந்திய அலுவலகங்களை மிகவிரைவில் அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்குப் பொறுப்பாக ஒன்றும் —

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு பொறுப்பாக ஒன்றும் —

யாழ். மாவட்டத்துக்கென ஒன்றுமாக மொத்தம் மூன்று அலுவலகங்கள் செயற்படவிருக்கின்றன.

மாகாண சபையின் செயற்பாடுகளை பரவலாக்கும் நோக்குடனும்—

பிரதேச செயலகங்களை முழுமையாகச் செயற்படுத்தத் தேவையான ஆலோசனைகளை வழங்கும் வகையிலும் — இந்த அலுவலகங்களை அமைக்க திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய பொருள்களை வடக்கே எடுத்து வருவது பற்றி பேச்சு

### உபவேந்தர் - ஹமில்டன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருள்களை வடக்கே எடுத்துச் செல்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து யாழ். பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுடன் கடந்த வாரம் கொழும்பில் பேச்சுக்கள் நடத்தினார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான காகிதாதிகள், இரசாயனப் பொருள்கள், கம்பியூட்டர்கள், ஜெனரேட்டர்கள் எடுத்துச் செல்லவும்—

நோர்வே நாட்டில் உள்ள தமிழர்கள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பு செய்த "ஓவ்-செட்" அச்சு இயந்திரத்தை வடக்கே எடுத்துச் செல்லவும்—

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 530 சைக்கிள்களை எடுத்துச் செல்லவும்—இச் சந்திப்பின்போது அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஜேர்மனியின் தலைநகராக பேர்லின்

பொன், ஜன. 16

ஜேர்மனியின் தலைநகரை பொன்னில் இருந்து பேர்லினுக்கு மாற்ற ஜேர்மன் அரசு தீர்மானித்துள்ளது.

1998 இல் பேர்லின் ஜேர்மனியின் தலைநகரமாக இயங்க ஆரம்பிக்கும் என்றும் — இதற்காக ஆயிரத்து 170 கோடி டொலர் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

## தென்மாகாணசபைத் தேர்தல்: சர்ச்சைக்குரிய உறுப்பினர் ஐ. தே. க. சார்பில் போட்டி

கொழும்பு, ஜன. 16

எதிர்வரும் தென்மாகாண சபைத் தேர்தலில் தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடப் போவதாக அந்த மாகாண சபையின் சர்ச்சைக்குரிய முன்னாள் உறுப்பினரான விமல பிரான்ஸிஸ்கு தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்ட தென் மாகாண சபையில் இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

இவர் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியை அடுத்தே தென் மாகாண சபை கலைக்கப்பட்டது என்பது தெரிந்ததே.

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வருமான எல்லையை உயர்த்த கோரிக்கை

கொழும்பு, ஜன. 16

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் மற்றும் மகாபொல பரிசில் வழங்குவதற்கான வருமான எல்லையை, முறையே மாதம் 8 ஆயிரம் ரூபா, 4 ஆயிரத்து 500 ரூபா ஆக உயர்த்த வேண்டும்.

இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் உயர்கல்வி அமைச்சுக்கு முன்கண்ட கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளது.

தற்போது மாதம் 500 ரூபா அல்லது அதற்கு உள்ளே வருமானம் [illegible] பிள்ளைகளுக்கு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிலும் மாதம் 3 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு உள்ளே வருமானம் பெறும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு மகாபொல புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இது நடைமுறைக்கு ஒவ்வாததாகும் என்றும் ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

அரச சார்பற்ற ஊழியர்களும், தனியார்துறை ஊழியர்களும் போலி வருமான சான்றிதழைக் காட்டி தங்கள் பிள்ளைகளுக்கு இப் புலமைப் பரிசில்களைப் பெறுவதாகவும் [illegible] என்றும் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-எ)

# தெய்வத்தின் குரலாக ஒலிக்கும் காஞ்சி மாமுனியின் அருளுரைகள்

"பிறந்தால் மறுபடி இறப்பு; இறந்தால் மறுபடி பிறப்பு; மறுபடியுப் ஒரு தாய்வயிற் முடங்குதல்; கரை காணாததும் கிடைத்தற்கரியதுமான இந்தவாழ்க்கைக் கடலில் இருந்து என்னைக் காத், தருளும் ஆண்டவனே!"

— இவ்வாறு வேண்டுதல் செய்த ஆதிசங்கரரின் வழியில், அவரின் அத்வைதப் பரம்பரையின் ஞான வாரிசாகத் தோன்றியவர் காஞ்சி மாமுனிவர் என்று பூஜிக்கப் பட்டு வந்த ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கலியுகத்தில் — இருபதாம் நூற்றாண்டில்— நம்மத்தியில் நடமாடும் இறைவனாகத் திகழ்ந்த காஞ்சிப் பெரியவர், அண்மையில் தமது நூறாவது வயதில் முத்தியடைந்தார்.

பதின்மூன்றாம் வயதில் துறவறம் பூண்ட காஞ்சி முனிவர் 1991 ஆம் ஆண்டு வரை 83 ஆண்டுகள் இந்தியா முழுவதும் பாதயாத்திரை மேற் கொண்டிருந்தார்.

கருணையின் கருவூலமாக, அருளின் அமுதசுரபியாக அருளாட்சி நடத்தி வந்த அந்த மாமுனி இன்று எம் மத்தியில் இல்லை. ஆனால் அந்த அருளரசரின் அனுபவ மொழிகள் இன்றும் எம்மத்தியில் 'தெய்வ வாக்கு' ஆக ஒலித்துக் கொண்டேயுள்ளன.

தெளிவு குருவின் திருமேனி காணல்.

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவுரை கேட்டல்.

தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே — என்பது திருமூலரின் 'திருமந்திரம்' ஆகும்.

இதற்கேற்ப- நேற்று இன்று நாளை எனும் நிலை கடந்த ஞானகுருவான அம்மாமுனிவரின் அருள்வாக்குகள், அனுபவக் கதைகள் சிலவற்றை இங்கு தருவது எமது ஆத்மீக விடுதலைக்கு உதவுமல்லவா!

### ஒழுக்கம்

வாழ்க்கையில் ஒழுக்கம் கடுமையான முறையில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். என்பதை காஞ்சி மாமுனிவர் அடிக்கடி வலியுறுத்திவந்தார்.

அவர் கேட்கிறார்! "ஒருவருக்கும் தெரியாது ரகசியமான இடத்துக்குப் போய், தீயில் கை வைத்தால் அது சுடாது இருக்குமா? ஒருவருக்கும் தெரியாமல் மறைவில் ஒழுக்கம் தவறினால் அது மனிதனை கீழ்மைப்படுத்தாது விட்டுவிடுமா? —

அப்படியானால் ஒழுக்கம் எப்படிப் பேணப்பட வேண்டும்?

"யாரும் இல்லாத இடத்திலும் மலரானது தன் முழு அழகோடு மலர்ந்து விளங்குகின்றது. அதன் மணத்தை நுகர யாரும் இல்லாத கானகத்திலும் அது மணம் வீசி, சுகந்தத்தைப் பரப்புகின்றது. அது போன்று எந்த இடத்திலும் இறைவனுக்குரிய மலர் என நம்மனதை வைத்திருப்பதே உயர்ந்த ஒழுக்கம்" — என்பது காஞ்சி முனியின் பதிலாக அமைகின்றது.

### அன்பு


மனிதப் பிறவி எடுத்ததன் பயனே அன்பு செலுத்துவது தான். அன்பு செலுத்துவதில் உள்ள ஆனந்தம் வேறு எதிலும் இல்லை. ஆனால் அன்பே சில வேளை துன்பத்தையும் கொடுத்து விடுகிறது. அப்படியானால் துன்பமே தராத வகையில் அன்பு செலுத்துவது எப்படி?

காஞ்சி மாமுனிவர் இதற்குப் பதில் தருகிறார்;

"நாம் ஒருவரிடம் அன்பு வைக்கின்றோம். கடைசியில் ஒரு நாள் அவர் நம்மைவிட்டு போய்விடுகிறார். அல்லது நாமாவது அவரை விட்டு ஒரு நாள் போகத்தான் போகிறோம். அன்பின் முடிவான பலன் துன்பம் தானா என்று பெரிய சலிப்பு உண்டாகிவிடுகின்றது. அன்பு செய்தாலும் முடிவில் துன்பம். அன்பு இல்லாமல் இருந்தாலோ வாழ்க்கையில் சுவையே இல்லை. இதற்கு ஒரேவழி, மாறாத, மாளாத அன்பை உண்டாக்கிக் கொள்வதே ஆகும்" — என்று கூறும் மாமுனி, நாம் அன்பு காட்டும் பொருள் நம்மை விட்டுப் பிரிந்து போகாத ஒன்றாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

அப்படியான பொருள் என்ன?

காஞ்சி முனி அதற்கு "என்றும் மாறாமல் இருக்கும்



பொருளான பரமாத்மாவிடம் பூரணமாக அன்பை வைத்து விட வேண்டும். பரமாத்மா நம்மை விட்டு ஒரு போதும் நீங்குவதில்லை, நம் சரீரத்தில் இருந்து உடல் பிரிந்தாலும் பிரிகிற உயிர் பரமாத்மாவிடமிருந்து பிரியாமல் அவரிடமே கலந்து விடும். எப்போதும் ஆனந்தமாக, நிறைவாக இருக்கலாம்" — என்கிறார் காஞ்சி ஸ்வாமிகள்.

### விநாயக வணக்கம்

விநாயக வணக்கத்தை காஞ்சி முனிவர் வலியுறுத்தி வந்துள்ளார்.

பெரிய அனுக்கிரகத்தை அநாயசமாகச் செய்பவர்விநாயகக் கடவுள் என்பதற்கு காஞ்சி ஸ்வாமிகள் ஔவைப் பாட்டி ஒருத்தியின் வாழ்வில் நடந்த சம்பவம் ஒன்றை சுட்டிக் காட்டுகின்றார்.

அக்கதை வருமாறு;

சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசத்துக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் ஔவையாரையும் உடன் அழைத்தப் போக எண்ணினார்கள். அப்போது ஔவை விநாயக பூஜை நடத்திக் கொண்டிருந்தார்.

சீக்கிரம் பூஜையை முடித்து விட்டு தங்களுடன் கைலாசத்துக்கு வருமாறு சுந்தரரும், சேரமானும் ஔவையை அவசரப்படுத்தினார்கள்.

ஔவையோ, "நீங்கள் போகிற படி போங்கள். உங்களுக்காக என் பூஜையை அவசரப்படுத்த முடியாது. விநாயக பூஜையே எனக்குக் கைலாசம் என்றார்". அவர்கள் கிளம்பி விட்டார்கள் ஔவை சாவதானமாக விநாயக பூஜையை முடித்துக் கொண்டாள்.

முடிவில் பிள்ளையார் பிரசன்னமாகி ஔவையை அப்படி தம் துதிக்கையால் தூக்கி ஒரே வீச்சில் கைலாசத்தில் கொண்டு போய் சேர்த்தார். ஔவைக்கு பின்னர் தான் சுந்தரரும் சேரமானும் கைலாசத்தைச் சென்றடைந்தார்கள்" — இக் கதையை காஞ்சி முனிவரே கூறியுள்ளார்.

இந்த நூற்றாண்டில் நமக்கெல்லாம் அருள் துணையாக வாழ்ந்த காஞ்சி ஸ்வாமிகளின் திருமேனி மறைந்தாலும் — அந்த அருளாளனின் அருளுரைகள் வரப்போகும் நூற்றாண்டுகளில் எல்லாம் மனித இனத்துக்கு வழிகாட்டியாக அமையப்போவது திண்ணமாகும்.

★

- தொகுப்பு: பிரசாந்தி -


## கேணல் கிட்டு மற்றும் ஒன்பது வேங்கைகள் நினைவாக...



கிட்டண்ணா கிட்டண்ணா
என்றழைத்த எம்மவர்
வாய்களை அடைத்துவிட்டான்
இந்திய அரசு அவன்
வாயை மூட எழமாட்டானோ.....
என்று பிறப்பான்
கிட்டண்ணா
என்று பிறப்பான்
கிட்டண்ணா

என்றென்றும் உங்கள் நினைவோடு;
எஸ். எம். பெர்னாண்டோ



நிறுவனத்தினரும்.
குடும்பத்தினரும்.

580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்

(ஒ-6977)

வங்கக் கடலில் காவியமான
தளபதி கிட்டு
உட்பட சக போராளிகள் ஒன்பது பேருக்கும்
எமது வீரவணக்கம்
ரகுராமன் நகை
53, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
(6905)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ், டிரெஸிங்ரேபிள், இரண்டு லாச்சி மேசை, ஒற்றை லாச்சி மேசை, ஸ்ருல், கட்டில்கள், மெத்தைகள், விறாக்கிகள், கதவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் பின் வீதி, நல்லூர். (28931)

கறுப்பு, வெள்ளை நிறத்தில் டிப்பலீஸ், ஸ்பிறீஸ் நாய்க்குட்டிகள் ஒரு சோடி விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (6904)

Yamaha 2000 (2 K V) ஜெனரேற்றரும், Briggs & Stratton நீர் இறைக்கும் இயந்திரமும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: யூட் போட்டோ, இல. 51, 4-ஆம் குறுக்கு வீதி, சின்னக் கடை. (சி-6967)

பாவித்த நல்ல நிலையில் உள்ள மேசைகளும், கடைத் தளபாடங்களும், கதவுகளும் விற்பனைக்குண்டு இல. 248, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28943)

## விற்பனையாகின்றது

O M O S English Grammar, A/L Past Papers 1993 சேர்ந்தது, விஞ்ஞானம் 9ஆம் ஆண்டு, ஆள்கூற்று கேத்திர கணிதம், மீட்டல் கணிதம்- O/L ஆகியன விற்பனையாகின்றன. ஸ்ரீலங்கா புத்தக சாலை, யாழ். (சி-7013)

## ENGINEERING DRAWING

முதலாம் வருட பொறியியல் பீட மாணவர்களுக்கான Engineering Drawing வகுப்பு 15 - 1 - 94 ஆரம்பமாகிவிட்டன. 03, வைமன் வீதி, நல்லூர். (28894)

## காணி தேவை

தொழில் முயற்சி ஒன்றிற்கு யாழ். நகரில் இருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்குள் வெறும் காணி தேவை. குத்தகை அல்லது வாடகையை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு; இல. 588, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28870)

## பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (Pvt ) Ltd , 14, Seenier Lane, Jaffna. (28797)

## தனியார் ஒருவரின் பராமரிப்பில் வீதி விளக்குகள்!

பருத்தித்துறை நகரில் தனியார் ஒருவர் மூன்று வீதி விளக்குகளை அமைத்து பராமரித்து வருகிறார்.

இவ்விளக்குகள் வேலாயுதம் மகாவித்தியாலயத்தடி, சிவன் வீதி, தெருமூடி மடத்தடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை தேனீர்கடை உரிமையாளரான திரு. செகசோதி என்பவரே இவ்விளக்குகளை அமைத்து பராமரித்து வருகிறார். (ஒ-173)

---

# I. A. B. (LONDON)
## JUNE 1994

INTER & FINALS | ஆரம்பம்: **19-01-1994**

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 ST. PETER'S LANE, JAFFNA.

[சி-6971]

---

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

## க.பொ.த. (உயர்தரம்) கலைப்பிரிவு அனுமதி - 1994

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தகுதி பெற்ற மாணவர்கள் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுடன் தங்கள் விண்ணப்பப் படிவங்களை 24 - 01 - 1994 க்கு முன் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள். ஒரு சில வெற்றிடங்கள் மட்டுமே உண்டு.

- அதிபர்.

[சி-6973]

---

# உதவித் தாதியர் பயிற்சி
## DIPLOMA IN NURSING - AID

## 28 - 01 - 1994இல் ஆரம்பம்

- ★ 18 மாதகால பயிற்சி நெறி
- ★ தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
- ★ உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்புடையதான சான்றிதழ்.
- ★ "அக்குபங்சர்" மருத்துவத்துறை இலவசமாக கற்பித்து சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவச பயிற்சியும், இலவச தங்குமிட வசதியும் அளிக்கப்படும்.

விவரங்கள்:-

**சாயி மருத்துவக் கல்லூரி,**
இல 6, பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.

(சி-6846)

---

அளவெட்டி வடக்கு தவளக்கிரி

# முத்துமாரி அம்பாள் ஆலய இரண்டாவது நினைவு தின இலட்சார்ச்சனை கும்பாபிஷேக தினப்பெருவிழா [1994]

மெய்யடியார்களே!

சென்ற ஆண்டு போல் இவ்வாண்டும் மணவாளக் கோலவிழா மிகச் சிறப்பாக அபிஷேக ஆராதனைகளுடன் தைத்திங்கள் ஐந்தாம்நாள்செவ்வாய்க்கிழமை உத்திரட்டாதி (18-01-94) நட்சத்திரத்தன்று அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு மு.ப. 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும் என்பதை தயவாக அறியத்தருகிறேன். அம்பாள் அடியார்கள் எங்கிருந்தாலும் விழாவைக்கண்டு களிக்க (வசதியுள்ளவர்கள்) தேவஸ்தானத்துக்கு வருகை தருமாறும், வர இயலாதவர்கள் தாம் இருக்கும் இடங்களிலுள்ள ஆலயங்களில் விசேட அர்ச்சனைகள் செய்தும், மீண்டும் எங்கள் பழைய வதிவிடங்களுக்குச் சென்று மனநிறைவோடு வாழவேண்டுமென்று அம்பாளை வேண்டி நல்லாசிபெறுமாறும் பணிவோடு வேண்டி நிற்கின்றேன்.

இங்ஙனம்,
சி. சிவபாதரெத்தினம்

அளவெட்டி வடக்கு.
12 01-94

(சி-6970)

---

# RADIO & ELECTRONIC TECHNICIAN COURSE

காலம் 4 மாதம்

- ✲ மிகக் குறைந்த தவணைக் கட்டணம்
- ✲ விசேட செய்முறைப் பயிற்சிகள்
- ✲ இலகு விரிவுரைகள்
- ✲ பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த சான்றிதழ்

## ஆரம்பம்: 24 - 01 - 1994

விபரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14. St, PETER'S LANE
JAFFNA,

(சி/6972)

---

# யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

கலாசாலை வீதி, திருநெல்வேலி.
கோப்பாய்.

## எழுதுவினைஞர் பதவி வெற்றிடம் 165/88 - 14

வேதனம்:
760 — 25 X 10 — 35 X 5 — 1185 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:
(அ) கூ. ச. ஊ. 14 ஆம் சம்பளத் திட்டத்தில் எழுது வினைஞர் பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த. சாதாரண பரீட்சையில் எண் கணிதம் / கணிதம்/வர்த்தக எண்கணிதம், தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பொது

வயது எல்லை:
வயது 20 தொடக்கம் 40 க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்க பணியாளர்களாக இருப்பவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

வசிப்பிடம்,
குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

பிணைப்பணம்;
கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியவை:
கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசித் திகதி:
**25 — 01 — 1994**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற் சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

தலைவர் - பொதுமுகாமையாளர்.

யாழ். மாவட்ட -
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, கோப்பாய்.

[சி-6969]

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அப்பாப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

தோற்றம் **05 — 04 — 1917** | மறைவு: **16 — 01 — 1992**

அன்போடும் பாசத்தோடும் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம்மை பார்தனில் பெயரோடு வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் இரண்டானாலும் எம் கனவிலும் நினைவிலும் உங்கள் அன்பும் கருணையும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

தங்கள் ஆன்மா சாந்தியடைய இறையடியை வேண்டி நிற்கும்!

மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

'இளைவாலை'
16/1, [illegible],
[illegible]

(28945)

---

# கிளான்ஸி பெர்னாண்டோ கொலை;
# சந்தேக நபர் பற்றிய தகவல் வெளியிடத் தவறினாராம்
## இளம் பெண்ணுக்குச் சிறை

கொழும்பு, ஜன. 16

முன்னாள் கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோவின் கொலை தொடர்பான சந்தேக நபர் சுப்பிரமணியம் என்றழைக்கப்படும் ராஜ்மோகன் என்பவர் பற்றிய தகவலை வெளியிடத் தவறியதற்காக சின்னத்தம்பி செல்வராணி என்ற பெண்ணுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எப். என். டி. ஜயசூரியா 2 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனையை விதித்தார்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட அப் பெண்ணுக்கு 8 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

அபராதம் செலுத்தத் தவறின் இரண்டு மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

---

# பிற்போடப்பட்டுள்ளது

நல்லூர் சமூகசேவை மன்றத்தினால் 14-01-94 அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 10-03-94 அன்று பிற்போடப்பட்டுள்ளதென்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

(28940)

—நிர்வாகம்

---

# கலையகம்
## ஓவியக் கல்வி நிலையம்

சித்திரம்
G C E O/L, ஆண்டு 6 முதல் 10 வரை
புதிய பிரிவுகள்

## ஆரம்பம்: 17-01-1994

மாலை 3 மணி

பென்த கொஸ்தே வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

[28934]

---

# நன்றி நவிலல்

திருமதி
## வள்ளிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
(கருகம்பனை)

காலஞ்சென்ற கருகம்பனை விதானையார் சங்கரப்பிள்ளையின் மனைவி வள்ளிப்பிள்ளை அவர்கள் 12-01-1994 அன்று சிவபதமடைந்து 13-01-1994 அன்று மரணச் சடங்குகள் புத்தூரில் நடைபெற்றன.

இதில் நாங்கள் சமுகம் கொடுக்க முடியாதிருந்த நிலையிலும், இறுதிக் கிரியையில் பங்கு பற்றியவர்களுக்கும், மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பலவிதங்களிலும் உதவி புரிந்தவர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.


Dr. ச. பத்மநாதன் (மகன்),
திருமதி ப. சண்முகவடிவு (மருமகள்)

கொழும்பு-6.

[28942]

---

# 10ஆம் நாள் கண்ணீர்அஞ்சலியும் தசாக கிரகயக்ஞ அழைப்பும்



திருமதி
## நடராசஐயர் திரிபுரசுந்தரி அம்மா

தோற்றம், **08-04-1917** | மறைவு: **08-01-1994**

தென்னிந்தியா மாயபுரத்தைச் சேர்ந்த (காலஞ்சென்ற) ஸ்ரீனிவாச சாஸ்திரிகள்-லெட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த (காலஞ்சென்ற) சந்தனஐயர் நடராசஐயர் அவர்களின் அன்பு மனைவியுமாகிய திரிபுரசுந்தரி அம்மா அவர்கள் நிகழும் ஸ்ரீமுகவருஷம் மார்கழித் திங்கள் 24ஆம்நாள் (08 - 01 - 1994) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் தசாக, கிரகயக்ஞ கிரியைகள் கீழ்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்: 17-01-1994 திங்கட்கிழமை காலை 9-00 மணி

கிரகயக்ஞம் 20-01-1994 வியாழக்கிழமை

மேற்படி கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்;
பிள்ளைகள்.

ந. கோபாலகிருஷ்ணசர்மா,
பொற்பதி வீதி, நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(28946)

---

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 9ஆம் நாள் (22-01-1994) சனிக்கிழமை பிற்பகல் 3-50 மணி முதல் 4-28 மணிவரையுள்ள ரோகினி நட்சத்திரமும் குரு சுபவோரையும் மிதுன லக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு திருமதி காசிநாதன் தம்பதிகளின் புதல்வன் திருநிறை செல்வன் **கோபிகிருஷ்ணா** அவர்களுக்கும்

திரு. திருமதி அருள்சிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி **சீத்தா** அவர்களுக்கும்

திருவருள் துணையுடன் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்:
St. Nicholas Greek Orthodox Church Community Hall
3840 Finch Ave. East, Scarborough, Ont., Canada.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி சி. காசிநாதன்,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

திரு. திருமதி அருள்சிங்கம்,
41/6, ஈச்சமோட்டை வீதி,
கண்டிக்குளி.

(இருவீட்டார் அழைப்பு)

[28915]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆசியும் ஆலோசனையும்

பிறந்த புத்தாண்டுக்குப் பின்னர் இலங்கையின் இரு மதத் தலைவர்கள் நாட்டின் இனப்பிரச்சினை குறித்து வெளியிட்ட கருத்துகள் ஒப்பு நோக்குவதற்கு பொருத்தமானவையாக இருக்கின்றன.

புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள ஜெரி டி சில்வா, அஸ்கிரிய பீடாதிபதி வண சந்திரானந்த தேரரிடம் ஆசி பெறச் சென்றபோது, தளபதிக்கு தேரர் சொன்ன அறிவுரை முதலாவது.

''தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரை எந்தப் பேச்சுவார்த்தையும் சாத்தியப்படாது.

''விடுதலைப் புலிகளை நம்பமுடியாது. அவர்களுடன் எந்த உடன்பாட்டையும் ஒப்பந்தத்தையும் செயற்படுத்த முடியாது. இயல்பு நிலையை ஏற்படுத்திய பின்னர்தான் பேச்சுகளும் மாநாடுகளும் நடத்தமுடியும்''— இது தேரர் தமது 'ஆசி'யில் குறிப்பிட்ட கருத்துக்கள்.

அதாவது— போரை உக்கிரமாக்கி; புலிகளை அடக்கி, அவர்களை ஆயுதங்களைக் கீழே போடவைத்த பின்னர் தான் சமரச நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்—என்று 'ஆசி' கூறுகிறார் அஸ்கிரிய பீடாதிபதி.

அகிம்சை பேசும் பௌத்தத்தை போதிக்கின்ற தேரரே இப்படி யுத்தத் தீயை வளர்ப்பதற்கு எண்ணெய் ஊற்றும் வகையில் 'ஆசி' கூறியிருக்கிறார்.

இதற்கு மறுபுறத்தில் —

இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் சார்பில் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தலைவரும் கொழும்பு பேராயருமான மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடைபெற்று வரும் மனிதாபிமானமற்ற போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

போரை நிறுத்துவதற்கான தமது ஆவலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் தெரியப்படுத்த வேண்டும் என்றும்—

இந்த முயற்சியில் சமூக தொடர்பு சாதனங்கள் மக்களுக்கு உதவ வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

யுத்தத்தை உக்கிரப்படுத்துமாறு இராணுவத் தளபதிக்கு ''ஆசி'' கூறுகிறார் ஒரு மதத்தலைவர்.

மற்ற மதத் தலைவரோ யுத்தத்தை நிறுத்துவதற்கான தமது ஆவலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவியுங்கள் என்று பொதுமக்களுக்கு ஆலோசனை கூறுகிறார்.

கிறிஸ்தவ மதத் தலைவரின் வேண்டுகோள் அவரது சமாதான விருப்பத்தையும், மனித நேயத்தையும், தேச நலனையும் மிக வெளிப்படையாகப் பிரதிபலிக்கின்றது.

இரண்டு மதத்தலைவர்களுமே இனத்தால் சிங்களவர்கள்தான். ஆனால் கிறிஸ்தவ மதத் தலைவரின் கருத்து அவரது பரந்த மனப்போக்கைக் காட்டுகிறது.

பௌத்த மதத் தலைவரோ தமது குறுகிய இன வட்டத்திற்குள்ளேயே நிற்கிறார். புத்தருக்கு இருந்த பரந்த மனப் பக்குவத்தை இவரிடம் காணமுடியவில்லையே!

கடந்த 40 வருடங்களில் இனப்பிரச்சினை இத்தகைய மோசமான நிலையை எட்டுவதற்கு காரணமாக இருந்தவர்கள் — இவ்வாறு அரசியலில் புகுந்து கொண்டு — ஆசி கூறும் பௌத்த மதபீடத்தினர் தான் என்பது அப்பட்டமான உண்மை.

அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த வேண்டியவர்கள்—

ஓரினம் அடக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிராமல் அவர்களுக்காக ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டியவர்கள்—

இவ்வாறு குதர்க்கமாய் ஆசி உரைகள் கூறுவதுதான் இன்றைய அனர்த்த நிலைக்குக் காரணம்.

இதனை அந்த மதத்தலைவர்கள் எப்போது உணரப் போகிறார்கள்? எப்போது திருந்தப் போகிறார்கள்?

# கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது அரசு தமிழர்களுக்கு விடுக்கும் பெரும் சவால்

**அரசியல்**

கிழக்கிலங்கையில்— தென் தமிழீழத்தில் — உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது. வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட கடைசித் தினமான இம்மாதம் பன்னிரெண்டாம் திகதியே தேர்தல் ஆணையாளர், முறைப்படி தேர்தல் திகதியையும் அறிவித்து விட்டார். அதன் பிரகாரம் மார்ச் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்தல் நடக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாநகரசபைச் சபை. திருகோணமலை, அம்பாறை மற்றும் வவுனியா நகரசபைகளுக்கும், கிழக்கில் உள்ள 36 பிரதேச சபைகளுக்கும் மேற்குறிப்பிட்ட திகதியில் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 431 உள்ளூராட்சி உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஏழு லட்சத்து தொளாயிரத்து மூன்று பேர் இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற கடந்த எட்டு மாதங்களில் கிழக்கிலங்கையில் தேர்தல் நடத்தப்போவதாக இரண்டு தடவைகள் அறிவிக்கப்பட்டுப் பின்னர் ஒத்திவைக்கப் பட்டன. தேர்தல் நடத்தக் கூடிய அமைதியான, பாதுகாப்பான சூழ் நிலை உண்டாகவில்லை என்று ஆளுங் கட்சிப் பிரமுகர்களே தெரிவித்ததன் பேரிலேயே இரண்டு தடவைகளும் தேர்தல் அறிவிப்பு ரத்தானது

இரண்டாவது தடவை தேர்தல் ரத்து அறிவிப்பு வந்ததற்கும் இப்போது தேர்திகதி நிர்ணயிக்கப்பட்ட இம்மாதம் 12ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் கிழக்கின் பாதுகாப்பு நிலையில் பெரிதாக மாற்றம் எதுவும் உண்டானதாக இல்லை. அமைதி நிலையும் அவ்வாறே

தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட இருந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்படும் அளவுக்கு அங்கு அரச படைகள் வழங்கும் பாதுகாப்பு பலவீனமாகவே இருந்தது.

இருப்பினும் கிழக்கில் தேர்தல் ஒன்றை நடத்திக் காட்டுவதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா முடிவு செய்து விட்டார். அங்கு தேர்தலை வைப்பதன் மூலம் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும், தங்கள் நிர்வாகத்தைத் தாமே நடத்துவதற்கும் அனுமதிப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அவர்களது வாக்களிக்கும் உரிமையையும், அதன் மூலமான ஜனநாயக உரிமைகளையும் வழங்குவதற்கு அரசு தடையாக இல்லை; பின்னிற்கவில்லை —இவ்வாறு உலகத்துக்கு ஒப்பனைக்குக் காட்டுவதே தேர்தலின் நோக்கம்.

### தேர்தலின் நோக்கம்

மேலும் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி விட்டால், அதனைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை நடத்த வாய்ப்பாக இருக்கும் என்றும் அரச வட்டாரங்கள் கருதுகின்றன.

இவ்வருட மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கலாம் என்பதும் அதற்கு முன்னர் அரசு தனது பலத்தை எடைபோடுவதற்காகவே கிழக்கிலும், தெற்கிலும் தேர்தல்களை நடத்துகிறது என்பதும் கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

தெற்கில் தென்மாகாண சபைக்கு மட்டுமன்றி வடமேல் மாகாண சபைக்கும் தேர்தல் நடக்கும் என்பதே கொழும்பில் உள்ளவர்களின் அவதானிப்பாகும். தென் மாகாண சபை கலைக்கப்பட்டதுபோல, வடமேல் மாகாண சபையும் எந்த வேளையிலும் திடீரெனக் கலைக்கப்படலாம். அதற்கு வாய்ப்பளிக்கும் வண்ணம் பிரஸ்தாப மாகாண சபையின் இப்போதைய ஆளும் தரப்பில் உள்ள இரண்டு உறுப்பினர்களைக் கடத்திச் செல்வது அரசின் கையாட்களுக்கு அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. வடமேல் மாகாண சபையில் ஆட்சி புரியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு இரண்டு உறுப்பினர் பெரும்பான்மை பலமே உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

வடமேல் மாகாண சபையை அடுத்து மேல் மாகாண சபையிலும் அரசு கண் வைத்திருக்கிறது. ஏதோ ஒரு விதத்தில் அரசியல் சூழ்ச்சி ஒன்றை நடத்தி அதனையும் கலைத்துவிட அரச உயர்மட்டம் கங்கணம் கட்டி நிற்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான குழி பறிக்கும் வேலைகள், பேச்சுகள் திரைமறைவில் நடப்பதாகவும் அறியவந்துள்ளது.

### பரீட்சார்த்தம்

புத்தாண்டின் பின்னர் தென்னிலங்கையில் மேற்கூறிய மூன்று மாகாண சபைகளுக்கும் தேர்தல்களை நடத்தினால் —

வருட மத்தியில் வெசாக்கைத் தொடர்ந்து (ஜூன் மாதத்தில்)பொதுத்தேர்தலை நடத்துவதற்கு முன்னர் ஆளுங்கட்சிக்கு உள்ள பலத்தை அறிந்து கொள்ளலாம் என்பதே அரசின் உள்ளார்ந்த எண்ணமாகும்.

தெற்கே மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் அதே காலப்பகுதியில், வடக்கு – கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது குறித்தும் ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறாராம்.

வடக்கு - கிழக்கு சர்வசன வாக்கெடுப்பை இந்திய அமைதிப் படைக்கால மாகாண சபைத் தேர்தல் போல நடத்தி கிழக்கைப் பிரிப்பது மிகவும் இலகுவானது என்று அவர் கருதுகிறாராம்.

கிழக்கை வடக்கிலிருந்து பிரிப்பதற்குச் சாதகமாக தேர்தலை நடத்தி விட்டால், பொதுத்தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும் சிங்களப் பேரினவாதிகளின் வாக்குகளை சந்தேகத்துக்கு இடமின்றி அள்ளிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையிலேயே அவர் சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்தி விடுவதில் ஆர்வமாக உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

வடக்கு - கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னோடியாக, பரீட்சார்த்தமாகவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கிழக்கில் நடத்தப்படுகிறது.

### தேர்தல் ஒரு சவால்

கிழக்குத் தேர்தலுடன் வவுனியா நகர சபைக்கும் வாக்களிப்பு நடக்கப் போகிறது. தமிழீழத்தின் வடக்கு எல்லைப் புறத்தில் தேர்தலை நடத்தி முடித்து விட்டால் அதனை ஒரு பெரும் சாதனையாகக் காட்டிக் கொண்டு சிங்களவர்களின் ஆதரவைப் பெறலாம் என்ற கணக்கையும் போட்டே வவுனியாவில் தேர்தல் நடத்தப்படுகிறது. அது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும் கிழக்கிலும் வவுனியாவிலும் தேர்தல் நடத்தப்படுவது விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் விடுத்துள்ள பெரும் சவால் என்ற கருத்தை கொழும்புப் பத்திரிகைகள் சிங்கள மக்கள்- வாக்காளர் - மத்தியில் விதைத்து வருகின்றன. தேர்தல் நடந்து முடிந்து விட்டால் அது நிச்சயமாக அரசுக்கு ஒரு சக புள்ளியாகவே (Plus point) இருக்கும்!

இந்திய அமைதிப் படை வடக்கு - கிழக்கில் நிலை கொண்டிருந்த வேளை, — 1988இல் — வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு எவ்வாறு தேர்தல் நடைபெற்றது. நியமனப் பத்திரங்கள் எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டன என்பது பெரும் 'சரித்திரம்'! சர்வாதிகாரி ஒருவர் தாம் நினைத்ததை அடைவதற்காக, பெயருக்கு நடத்திய தேர்தலாகவே அது அமைந்திருந்தது. அதனை விடவும் மோசமான சூழ்நிலையில், ஜனநாயக மரபுகளையும், விதி முறைகளையும் கேலிக் கூத்தாக்கி விடும் வகையில் ஒரு தேர்தலை கிழக்கிலும் வவுனியாவிலும் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

### பாதுகாப்பு நிலை முன்னேற்றமாம்

இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்தை விட, கிழக்கிலங்கை இப்போது மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறிக்கொள்கின்றன, அந்தக் ''கயிற்றை'' அரசாங்க உயர் வட்டாரங்களும் விழுங்கிக் கொண்டுள்ளன. கிழக்கில் தம்மால் தேர்தல் ஒன்றை நடத்த முடியும் என்ற துணிச்சல் வந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எப்படியோ, இந்திய இராணுவத்தின் காலத்தில் நடைபெற்ற வடக்கு- கிழக்கு மாகாணசபைத் தேர்தலை விட பலாத்காரமான தேர்தல் ஒன்றுக்கு அரசும் படைகளும் திட்டமிட்டுள்ளன என்பது வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் காலத்திலேயே காண்பிக்கப்பட்டு விட்டது.

தேர்தலில் பங்குபற்ற விரும்பாத தமிழ்ப் பிரமுகர்களை கட்டாயப்படுத்தி - பயமுறுத்தி- வேட்பாளர்களாக்கியது சுதந்திரமான, ஜனநாயக விதி முறைகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். வேட்பாளர் பட்டியல் ஒன்றைத் தயாரித்து வைத்துக் கொண்டு, அந்தப் பட்டியலில் உள்ள பிரமுகர்களின் வீடுகளுக்குப் படையினர் வாகனங்களில் ஆயுத பாணிகளாகச் சென்று நியமனப் பத்திரங்களில் கைபொப்பம் வாங்கியதும், வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்குக் கூட்டிச் (இழுத்துச்) சென்றதும் சுதந்திரமான தேர்தலின் அறிகுறியா? வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் தினங்களில் இந்திய இராணுவம் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ததைவிட இது மோசமானதாகும்.

போட்டியிட மறுத்த பிரமுகர்கள் கைது செய்யப்பட்டார்கள். அரசாங்கமும், படையினரும் விரும்பியவாறு தேர்தலில் போட்டியிட மறுத்தால் தண்டனை உண்டு என்று பயமுறுத்தும் வகையில் இந்தக் கைதுகள் நடைபெற்றன. கைதான பிரமுகர்கள் காணாமற்போனோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

வேட்பாளர்களைத் தேடுவதிலேயே இத்தகைய கெடுபிடிகளும் சர்வாதிகாரத்தனமும் நடந்தன என்றால், வாக்களிப்பு எவ்வாறு இருக்கும் என்பதனை எவரும் கற்பனை செய்து கொள்ளலாம். தான் வகுத்துக் கொண்ட பலாத்காரத் தேர்தல் ''விதிமுறை''களுக்கு ஏற்ப தேர்தலை நடத்திமுடிப்பதற்கு அரசு தயங்கமாட்டாது என்றே கருத வேண்டும்.

### சுயரூபம் காட்டப்படுகிறது

இந்தத் தேர்தலை கொழும்பில் இயங்கும் தமிழ்க் கட்சிகளில் சில பகிஷ்கரித்துக் கொண்ட போதிலும், அரசுக்கு முண்டு கொடுத்து தமிழர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் குழுக்கள் தங்கள் வழமையான செயற்பாட்டை நிறுத்திக் கொள்ளவில்லை

கிழக்கு- வவுனியா உள்ளூராட்சித் தேர்தல், வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னோடியானது, பரீட்சார்த்தமானது என்பது இந்தக் குழுக்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. எனினும் சர்வசன வாக்கெடுப்பை எதிர்த்தும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் கிழக்கில் தேர்தல் நடத்தக் கூடாது என்றும் முன்னர் கூக்குரல் போட்டு வந்த இந்தக் குழுக்கள் இத்தேர்தலில் பங்கு கொண்டு தமது சுயரூபத்தை மீண்டும் காட்டியுள்ளன! தமிழர்களின் அரசியல் விடிவுக்கும், வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் இந்த லட்சணத்தில் தான் சேவை செய்யப்போகின்றோம். காட்டிக்கொடுக்கும் பணியிலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்று நிரூபித்துள்ளன,

எனினும்—

தென் தமிழீழம் வாழ் தமிழர்கள் இத்தேர்தலை பகிஷ்கரிப்பது என்று உறுதியாக இருந்தால் அரசின் சூழ்ச்சியை முறியடிக்கலாம். இந்தத் தேர்தலில் வாக்களித்தால், அது இதுவரை காலமும் தாம் நடத்திவந்த உரிமைப் போராட்டத்தை முறியடிக்கும் செயலாக அமையும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

வாக்களிக்கச் செல்லாவிடில் படையினர் பழிவாங்குவார்கள்; வெளிப்படையாகப் பகிஷ்கரித்தால் உயிர் காவு கொள்ளப்படலாம் என்ற நிலையிலும் தேர்தலை தோற்கடிப்பதற்கு— செல்லுபடியாகாமல் செய்வதற்கு— ஒரு வழியுண்டு. வாக்குச்சீட்டுகளை வாங்கி அவற்றின் மேல் தாறுமாறாகக் கீறி அவற்றைச் செல்லுபடியாகாமல் செய்வதே அந்த வழியாகும். ஒரு சிலர் மட்டுமன்றி எல்லோரும் ஒன்று சேர்ந்து அப்படிச் செய்தால் தமிழர் பிரதிநிதிகள் என்று எவரும் தெரிவாகும் வாய்ப்பு இல்லாது போய்விடும்!

மொத்தத்தில் மார்ச் முதலாம் திகதிக்கு நிச்சயிக்கப்பட்டுள்ள கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் வன்முறையிலும் அசம்பாவிதங்களிலுமே முடியும் என்று கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

★ ★ ★

## வடக்கிலிருந்து ஐ.சி.ஆர்.சியை வெளியேற்ற பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் முனைப்பு

### வெளியேற்றும் ஆர்வம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துவரும் பணியை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு நிறுத்தி விட்டது. அதேபோல யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் உணவுப் பொருள்களைக் கொண்டுவரும் பணியையும் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு (ஐ. சி. ஆர். சி.) நிறுத்தும் என்றே கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்த்தனவாம். ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் கொண்டு வரும் பணியைத் தொடர்ந்து செய்வது என்ற செஞ்சிலுவை முடிவு கொழும்பில் உள்ளவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

இந்த ஏமாற்றத்தின் விளைவு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவைச் சந்தித்தபோது மிக வெளிப்படையாகவே தெரிந்ததாம். ஐ. சி. ஆர். சி. இல்லாவிட்டால் புனர்வாழ்வு அமைச்சின் கப்பலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல முடியாதா? — என்று ஹமில்டன் நேருக்குநேர் கேட்டிருக்கிறார்.

வடக்கில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு இயங்குவதால், அரசாங்கப் படைகள் இங்கு நடத்தும் அட்டூழியங்களுக்கு ஏதோ ஒரு வகை

**உதயகாந்தன்**

யில் அது சாட்சியாகிவிடும் என்று அரச உயர்வட்டாரங்கள் அஞ்சுகின்றன. அதன் காரணமாக ஏதாவது நொண்டிச் சாட்டைக் கூறியோ அல்லது மறைமுகமாக ஏதோ ஒரு விதத்தில் அழுத்தத்தைக் கொடுத்தோ செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை வடக்கிலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்பதில் அரச அதிகாரிகள் முனைப்புடன் செயற்படுகிறார்கள்.

கிளிநொச்சி, முல்லைத் தீவுப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வந்த செஞ்சிலுவை வாகன அணியில் கார் ஒன்றுக்குள் வைத்து ''பென்ரோச பற்றி''கள் கடத்தப்பட்ட விவகாரம் பெரிதுபடுத்தப்பட்டதன் உள்ளார்த்தமே முன் கூறிய முனைப்பின் விளைவே.

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவை வெளியேற்றி விட்டால் யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் பொருள்கள் அனுப்புவதை இடைக்கிடை நிறுத்தி விட்டு, தொடர்ந்து அனுப்புவதாக வெளியே கூறிக்கொள்ளலாம் அல்லவா?

சென்ற வாரம்தான் மிகக் கஷ்டப்பட்டு குடாநாட்டுக்கு ஆறாயிரம் தொன் கோதுமை மா அனுப்பினோம். அதற்கிடையில மீண்டும் 2,000 தொன் கேட்கிறீர்கள். என்ன இது?— என்று கொழும்பு அதிகாரி ஒருவர் இங்குள்ள அதிகாரியிடம் அதட்டிக் கேட்கின்றார் என்றால்—

யுத்தம் இறுகி வரும் ஒரு கட்டத்தில், குடாநாட்டுக்கு உணவுப் பொருள் எதனையுமே அனுப்பாமல் விட்டுவிட்டு, வழமைபோல் அனுப்புகிறோம் என்று கூறமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

---

தமிழக கடலோரப் பகுதியில்

## புலிகளின் ஊடுருவலை தடுக்க தீவிர கண்காணிப்பு

சென்னை, ஜன. 16

தமிழக கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க மாநில அரசின் உத்தரவின் பேரில் தீவிர கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது,

கடலோர கிராமப் பகுதியில் வீட்டுக்கு வீடு தேடும் பணியும் மேற்கொள்ளப்படுகின்றது.

கடற்கரைப் பகுதிகளின் நுழைவிடங்களிலும் எல்லைப் பகுதிகளிலும் சுங்க காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை அருகே 7 இடங்களில் சுங்கக் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு சுங்க காவல் நிலையத்திலும் ஒரு காவல்துறை துணை ஆய்வாளரும், 15 காவலர்களும் ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளுடன் நிறுத்தப் பட்டுள்ளனர்.

புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவல்களை அடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக தமிழக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## எய்ட்ஸ் என்றதும் கீழே குதித்துத் தற்கொலை!

கொழும்பு, ஜன. 16

பம்பாய் நகரைச் சேர்ந்த 60 வயதான வழக்கறிஞர் நிக்கானந்தசர்மா என்பவர் தமக்கு எய்ட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்தவுடன் தாம் அனுமதிக்கப்பட்ட மருத்துவமனையின் எட்டாவது மாடியில் இருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யு. என். ஐ. செய்தி ஸ்தாபனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

## துப்பாக்கிவேட்டு சிறுமி காயம்

எங்கிருந்தோ வந்த துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி சிறுமி ஒருத்தி கையிலும், முகத்திலும் காயமடைந்தாள்.

கிளிநொச்சிப் பகுதி முரசுமோட்டையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாகமுத்து தயாளினி (வயது 13) என்ற சிறுமியே காயமடைந்தவராவார். (இ-15)

## படகு விபத்தில் 100பேர் பலி

கல்கத்தா, ஜன. 16

மேற்கு வங்காளம், கங்கா சாகர் ஆறில் நேற்றுக்காலை இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் சுமார் நூறு யாத்ரீகர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகுடன் இன்னொரு படகு மோதியதைத் தொடர்ந்தே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## பேக்கரிகளுக்கு வழங்கும் மா போதுமானது அல்ல

### சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

தற்போது யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு செயலகத்தினால் ஒரு கிழமைக்கு வழங்கப்படும் 22 'லோட்'மா போதுமானது அல்ல.

தற்போதுள்ள நிலைமையில் கிழமைக்கு 25 'லோட்' மா என்ற வகையில் தரப்பட்டாலேயே பாண் பாவனையாளர்களின் முழு தேவையையும் பூர்த்தி செய்து தட்டுப்பாடு இன்றி பாணை விநியோகிக்க முடியும்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஒரு 'லோட்' மாவில் ஒவ்வொன்றும் 67 கிலோ கிராம் கொண்ட 150 மூடைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

வழமையாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் இறாத்தல் பாண் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது என்றும் —

இவற்றை இரண்டரை லட்சம் பேர் ஒருவருக்கு அரை இறாத்தல் என்றவாறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

மண்ணும் மரமும் பிரியாதது போல்
மரமும் மனிதனும் பிரியாதனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவுகள்

## தமிழ்த் தாயின் புலம்பல்

என் மகனே கிட்டு எங்கு சென்றாய்
வீரத்தின் விளை நிலமே
வீரகாவியங்கள் படைத்த உன்
தினவெடுத்த தோள்கள் சரிந்தனவோ
அலை போன்ற மக்களின்
அன்பினில் திளைத்தவனே
அலைகடல் நடுவே
எரிமலையாய் வெடித்தனையோ!
அன்னை என் மானத்தை காத்தாய்
என் மகனே!
நீ நிச்சயம் மீண்டும்— மீண்டும் ......
எழுந்து வருவாயடா - என்
அடிமை விலங்கொடிப்பாயடா!



# தளபதி கேணல் கிட்டு

## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

எமது நமை மைந்தனின்

**முதலாம் ஆண்டு நினைவு**

நிகழ்வுகளில் கல து கெள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

- திருமதி இராசலட்சுமி சதாசிவம்,
(கிட்டம்மா)

உடையாமணல்
வேம்படி, வல்வெட்டித்துறை

(சி-6974)

---

உ
சிவமயம்

ஏழாலைதெற்கு - களபாவோடை

## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தானம்

### வசந்தபுரம்

18 - 01 - 1994 அன்று ஆரம்பமாகவிருந்த எங்கள் ஆலய அலங்காரத் திருவிழா தவிர்க்க முடியாத காரணங்களினாற் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

- தேவஸ்தானம்

[சி-6978]

---

## இராமநாதன் கல்லூரி சுன்னாகம்

## G. C. E. (A/L) 1996

க. பொ. த. (உ. த) 1996 வகுப்புக்கள் 19-01-94 இல் ஆரம்பமாக உள்ளன. தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தகுதி பெற்றவர்கள் அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்

(சி 2059)

---

## [illegible]துநந்தனின் நீங்கா நினைவுகள்

[illegible]: 07 11-1993 உதிர்வு: 11-01-1994

கண்ணீரால் காணிக்கை

துநந்தா எங்கு சென்றாய்
யா[illegible]மக்கு [illegible]ள்ள [illegible]தையா
ம[illegible] போன்று [illegible]யக்கிநின்ற
[illegible]ன்னவனே போன தெங்கே
[illegible]னியமுதே கற்கண்டே
க[illegible]ணுனை கவர்ந்தானே
இனியமுள்ள எ[illegible] மைந்தா
ஏனைய்யா சென்று விட்டாய்

ப[illegible]லா போன்ற உன்முகத்தை
[illegible] தேடுகின்றோம்
[illegible] காலம் இங்கிரு பாய்
எனக் கனவு கண்டோமே
[illegible]யாத உன் சிரிப்பில்
கொடுத்தோமே மனதையெலாம்
[illegible]லபட்ட [illegible]ருப்பெனவே
ஆகிவிட்டோம் ஐயா நாம்

எங்கள் அன்புச் செல்வம் யதுநந்தன் நோய்வாய்ப்பட்டு துன்புற்ற வேளையில் முழுமுயற்சியுடன் ஆதரவளித்த யாழ். போதனா வைத்தியசாலை குழந்தைகள் பிரிவு வைத்திய அதிகாரிகள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும், அத்துடன் அவரது மறைவு குறிந்து எமது துன்பத்தினைப் பகிர்ந்து கொண்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலரகிதசர்மா - காயத்ரி
(பெற்றோர்)

79 கிராம வீடமைப்புத் திட்டம்,
திருநெல்வேலி.

(28954)

---

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் செல்லம்மா

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்லம்மா காரைநகரில் (23-12-93) அன்று காலமானார் இவர் இளைப்பாறிய தபால் ஊழியர் ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், பரமசிவம், இராசலட்சுமி (லச்சுமி), உருத்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தயாரும், காலஞ்சென்ற திருமதி பரமசிவம் புவனேஸ்வரியின் அன்பு மாமியும். தவராணி, தவராசா, நந்தகுமார், சிவராசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது தகனக்கிரியை காரைநகரில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
ஆ. சுப்பிரமணியம் (கணவர்)
சு. இராசலட்சுமி (மகள்)

சு இராசலட்சுமி
C/O S.செல்வராசா
37/22 முதலாம் ஒழுங்கை
பிறவுண் றோட்
யாழ்ப்பாணம்

(28953)

## திருமதி கதிரேசு தங்கரத்தினம்

(மயிலிட்டி)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இருபாலையில் வசித்தவருமாகிய திருமதி கதிரேசு தங்கரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற மயிலிட்டி விதானையார் சின்னப்பு கதிரேசுவின் அன்பு மனைவியும், திருமதி நவமணிதேவி அருணாசலத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புத் தாயாரும், சரவணமுத்து அருணாசலத்தின் அன்பு மாமியும், கோபாலராஜன், ராஜ்குமார் (மாணவர்கள், பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14 - 01 - 1994 வெள்ளிக்கிழமை இருபாலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. அருணாசலம்
(மருமகன்)

(6773)

## இசிதோர் சவிரிமுத்து

குளமங்கால், மல்லாகத்தை வதிவிடமாகக் கொண்ட இசிதோர் சவிரிமுத்து 12-01-94 புதன்கிழமை இறைபதமடைந்தார். இவர் பிலோமினாவின் அன்புக் கணவரும், திருமதி ஆன்டெய்சி சகாயமலர், திருமதி ஜசிந்தா மேரிமலர், திரு. அன்ரனி சென். யோசப், செல்வி மேரி ஜெயமலர், செல்வன் யோண்சன் கன்சியூஸ் (ஓமான்), செல்வன் கிறிஸ்ரியன் அலெக்ஸியூஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திரு ஜெறாட் வின்ரன் (ஓமான்), திரு. செபமாலைமுத்து (சவூதி), ஆகியோரின் மாமனாரும், ஜெறின், சாள்ஸ், யூட்ஸ் மெரிற்றா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

இவரின் நல்லடக்கம் இன்று (16 - 01 - 94) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலய சேமக்காலையில் இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்;
வண. பிதா S. எட்வின்

புனித சவேரியார் கல்லூரி,
கொழும்புத்துறை.

(28956)

---

## கிட்டுவின் படத்துடன் 'வெளிச்சம்'

யாழ்ப்பாணம், ஜன. 16

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் 'வெளிச்சம்' ஜனவரி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்திய அரசின் சதியால் வங்கக் கடலில் காவியமான கேர்ணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் படங்கள் அந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

(இ-5)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 16

கடற்புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த வீரவேங்கை சுதாஜினி என்ற போராளி சுகவீனம் காரணமாக கடந்த வியாழனன்று வீரச்சாவடைந்தார்.

(இ-5)

---

மீளக்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீப்பெட்டி, பனடோல் மற்றும் போஷாக்கு உணவு வகைகளை அவர்கள் எடுத்துச்செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(த-எ)

---

பாரிஸ்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொப்பியூட்டர்களும் ஏனைய தஸ்தாவேஜுக்களும் நாசமாகி உள்ளன என்றும் இலங்கை வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

வேறு செய்தி ஏஜென்சிகளில் இதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

(இ-க)

---

பேக்கரிகளுக்கு...
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாவித்து வந்தனர் என்றும் —

தற்போது வெளிச் சந்தையில் மா தட்டுப்பாடாக இருப்பதால் பாண் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-162)

---

அரசமைப்பு---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இரண்டு மாகாணங்களுக்கான இரண்டு தனித்தனி நிர்வாகப் பிரிவுகளை உருவாக்கும் வகையில் பிரிப்பது போன்ற, மங்கள முனசிங்க தெரிவுக் குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பதவி ஏற்றதன் பின்னர் அரசியல் தீர்வொன்றை காண்பதற்கு அரசாங்கம் அக்கறையில்லாது இருக்கிறது. என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தெரிவித்து வருகின்றனர்.

அரசியல் தீர்வின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்து வருகிறது.

முன்னர் ஒரு போதும் இல்லாத வகையில் மாகாண சபைகள் மூலம் அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற்று வருகின்றது.

வட பகுதிக்கு பெரும் பொருட் செலவிலும் அதிகமான ஆள் வலுவை ஏற்படுத்தியும் உணவு மற்றும் உதவிகளை வழங்கி வருகின்றது.

சமாதான பூர்வ தீர்வுக்கான பாதையில் அரசாங்கம் காட்டி வரும் விருப்பத்ததுக்கு இது முக்கிய அடையாளமாகும் — என்று கூறினார்.

(அ-க-162)

---

# மரண அறிவித்தல்

திருமதி

## ந. யோகம்மா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசாரி நவரட்ணம் யோகம்மா காலமாகி விட்டார்.

அன்னார் நவரட்ணத்தின் (மணிவண்ணன்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பையா செல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், நகுலேஸ்வரி, மதியழகன், விக்கினேஸ்வரி, சசிகலா, அன்பழகன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 16-01-94 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
நவரட்ணம்
(கணவன்)
டவஸ் வீதி (வளாக வீதி)
திருநெல்வேலி.

(28961)

---

## வடக்கு-கிழக்கு மாகாணசபை

# அமைச்சுகளின் எண்ணிக்கை ஐந்தாகக் குறைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 16

வடக்கு—கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் சபையில் உள்ள அமைச்சுகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாண சபையிலும் ஐந்து அமைச்சுகளையும் ஐந்து செயலாளர்களையும் மாத்திரமே வைத்திருக்க முடியும் என்றும் —

அந்த செலவீனங்களுக்கு மட்டுமே நிதி வழங்க முடியும் என்றும் — அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண சபையில் தற்சமயம் உள்ள எட்டு அமைச்சுச் செயலாளர்களுக்கு சம்பளம் வழங்கத் தேவையான நிதி இல்லாததாலும்—

போதிய வருமானம் இல்லாததாலும்—

அமைச்சுகளின் எண்ணிக்கையை ஐந்தாகக் குறைக்க முடிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

---

# மரண அறிவித்தல்கள்

## T. A. குமாரசாமி

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், சம்பந்தர்கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஒய்வுபெற்ற டாக்டர் T. A. குமாரசாமி காரைநகரில் காலமாகிவிட்டார். அன்னார் தனலட்சுமியின் அன்புக் கணவரும், தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் - சுந்தரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், க. கு. சுந்தையாபிள்ளை சுந்தரம் தம்பதிகளின் மருமகனும், விஜயலட்சுமி (லண்டன்), தவமலர் (ஜேர்மனி), யோகாம்பிகை (லண்டன்), செல்வமலர் (கனடா), டாக்டர் கணேசலிங்கம் M. B. B. S (லண்டன்), சோமஸ்கந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம் (லண்டன்), சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), ரத்தினசபாபதி (லண்டன்), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலம்சென்றவர்களான சபாரத்தினம், கனகரத்தினம், மகாதேவா, மற்றும் சண்முகநாதன் (மலேஷியா) திருமதி பூரணம் இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
A. S. தியாகராஜா
(பேறாமகன்)

271/1, நாவலர் லேன்,
ஆனைப்பந்தி.

(28959)

## திரேசம்மா சூசைப்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திரேசம்மா சூசைப்பிள்ளை (தங்கம்) காலமானார்.

அன்னார் திரு சூசைப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், மேரி யூசில்டா (யசோ), அன்ரன் றொனால்ட் (றொணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சு.வெ. றாஜ்குமார் (யாழ். பல்கலைக்கழகம்], றெமின் ஜெயலகி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன், பிரசாந், பியோ தர்ஷன், டெனிசியஸ் றசில் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 14/1 கோவில் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து இன்று (16-01-94] பி.ப 3 மணிக்கு சில்லாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
சு.வெ. றாஜ்குமார்

14/1 கோவில் வீதி
யாழ்ப்பாணம்

(28960)

## செல்லையா சிவலிங்கம்

முன்னாள் வியாங்கொட சிப்சைட் ஸ்ரோர்ஸ் பங்காளரும், உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் பொருளாளருமான செல்லையா சிவலிங்கம் 13 - 01 - 1994 இல் திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உரும்பராய் முருகேசு செல்லையா, செல்லம்மா தம்பதிகளின் மூத்தமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவதாசன் (ஹற்றன் நஷனல் வங்கி முன்னாள் யாழ்ப்பாணமும் தற்போது திருகோணமலையும்) அவர்களின் அன்புத் தந்தையும், நிரஞ்சனி சிவதாசனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தங்கரத்தினம், திரு. செல்லையா பஞ்சலிங்கம் (ஓய்வு பெற்ற கமநல சேவைகள் உதவி ஆணையாளர் முல்லை மாவட்டம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 14-01-1994இல் திருகோணமலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
செ பஞ்சலிங்கம்,
(சகோதரன்).

உரும்பராய் தெற்கு.
உரும்பராய்.

(28949)

## திருமதி இராசமணி கணபதிப்பிள்ளை

(சோமதீபம் - சண்டிலிப்பாய்)

வடக்குச் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கல்வளை-சண்டிலிப்பாயை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி க. இராசமணி காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி கணபதிப்பிள்ளை(தாடியர்)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற க. சிவசோதி (National Grindlays Bank), காலஞ்சென்ற பரஞ்சோதி (Staff Assisant of Tele-Communication) திருமதி இ. நாகேஸ்வரி (Colombo), க. ஜெயசோதி, திருமதி ப. ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சி. விசாலாட்சி காலஞ்சென்ற கிருஷ்ணசாமி (Fort Rood Thromption Co.), காலஞ்சென்ற திருமதி ப. உமாதேவி, சோ. பத்மநேசன் (Tele-Comm.) ஆகியோரின் அன்பு மாமியாரும், சி. உதயகுமார் (Tele-Comm.), சி. வசந்தகுமார் (Commercial Bank), ராஜகுமார் (Canada), திருமதி பா. வத்சலா, ப. வாகீசன், திருமதி க. வசந்தி, திருமதி வ. வதனி (Colombo), காலஞ்சென்ற திருமதி ஜெ. சசிகலா, திருமதி ப.சரண்யா, (Colombo), திருமதி ரா. சித்திரா (Norway), திரு. ப. சோமதீபன் (Holand) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனோஜன், அனித்தா (Colombo), டினேஷ் (Norway) ஜெயந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சண்டிலிப்பாய் இல்லத்தில் இன்று காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ. பத்மநேசன்
(மருமகன்)

சண்டிலிப்பாய். [28958]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org